# மாத்தறை பிரதேச சபை

## மாத்தறை மாவட்டம்

01. நிதிக் கூற்றுக்கள்

1.1 நிதிக் கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2011 மே 20 திகதியும், முன்னைய ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2010 மே 06 திகதியும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்தன.

1.2 அபிப்பிராயம்

இவ்வறிக்கையில் அடங்கியுள்ள எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்களின் காரணமாக கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்த மாத்தறை பிரதேச சபையின் 2010 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் மீது அபிப்பிராயம் ஒன்றினை தெரிவிக்க முடியாதுள்ளேன்.

1.3 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் கணக்கீட்டுக் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) ஊழியர் பிணைப் பதிவேட்டின் பிரகாரம் ஊழியர் பிணை முதலீட்டின் பெறுமதி ரூபா 17,067 தொகை எனினும் நிதிக் கூற்றுக்களில் அவை ரூபா 2,000 என காட்டப்பட்டிருந்தமையால் வித்தியாசம் ரூபா 15,067 ஆகும்.

(ஆ) நடைமுறை பொறுப்புக்களின் கீழ் காட்டப்பட வேண்டிய ரூபா 800 இற்கான பதவியணிக் கடன் மிகை அறவீடு, நிதிக் கூற்றுக்களில் கிடைக்க வேண்டிய கணக்குகளின் கீழ் காட்டப்பட்டிருந்தது.

(இ) மூலதனத்திற்கான வருமானப் பங்களிப்பு கணக்கின் 2009 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு மீதி ரூபா 71,867,673 தொகை எனினும் மீளாய்வாண்டிற்கான ஆரம்ப மீதி என ரூபா 74,867,673 தொகை ஒன்று காட்டப்பட்டிருந்தமையால் வித்தியாசம் ரூபா 3,000,000 தொகையாகும்.

(ஈ) நிலையான வைப்புக் கணக்கின் ஆரம்ப மீதி ரூபா 1,353,098 இற்கான ஆரம்ப மீதியை பேரேட்டில் பதிவு செய்யும் போது ரூபா 1,233,097 தொகை என பதிவு செய்யப்பட்டிருந்தமையால் வித்தியாசம் ரூபா 120,000 ஆகும்.

(உ) மீளாய்வாண்டின் மூலதன செலவு கணக்கில் செலுத்த வேண்டிய பெறுமதி ரூபா 16,374,675 ஆக காணப்பட்டதுடன் மீளாய்வாண்டிற்காக சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் பெறுமதி ரூபா 16,528,687 என்பதால் வித்தியாசம் ரூபா 154,012 ஆகும்.

(ஊ) 2008 ஆண்டு முதல் பயன்படுத்தப்படாமல் களஞ்சிய அறை ஒன்றில் வைக்கப்பட்டிருந்த நன்கொடை ஒன்றாக கிடைத்திருந்த 04 உடற்பயிற்சி உபகரணங்கள் மற்றும் பாரம் தூக்கும் உபகரண தொகுதியின் பெறுமதியினை மதிப்பீடு செய்து கணக்குகளுக்கு எடுத்திருக்கவில்லை.

(எ) மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறு வேலைகள் பூர்த்தி செய்திருந்த ரூபா 1,974,916 இற்கான நான்கு நிர்மாண வேலைகளின் பெறுமதி நிதிக் கூற்றுக்களில் நிலையான சொத்துக்கள் என காட்டப்பட்டிருக்கவில்லை.

(ஏ) மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு வர்த்தக அனுமதிப்பத்திரங்களுக்காக கிடைக்க வேண்டிய ரூபா 31,362 தொகை கணக்குகளுக்கு எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஐ) இலக்கம் 1-51-006387-9 கொண்ட வங்கிக் கணக்கில் மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு காசேட்டின் பிரகாரம் மீதி ரூபா 212,929 தொகை எனினும், நிதிக் கூற்றுக்களில் அவை ரூபா 4,818 தொகை என காட்டப்பட்டிருந்தமையால் வித்தியாசம் ரூபா 208,111 ஆகும்.

1.3.2 பொருத்தமற்ற வெளிப்படுத்தல்கள்

பின்வரும் பொருத்தமற்ற வெளிப்படுத்தல்கள் அவதானிக்கப்பட்டன.

1993 ஆண்டு முதல் காணப்படும் பைபர் வேலை இருப்பின் பெறுமதி ரூபா 195,877 இனை அறவிடப்படக் கூடிய துணை சேவை என நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்தன.

1.3.3 செலுத்த வேண்டிய கணக்குகள்

(அ) 2010 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு 01 வருட காலத்தை விஞ்சிய செலுத்த வேண்டிய கணக்குகளில் பெறுமதி ரூபா 15,278,752 ஆகும்.

(ஆ) 2010 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு சபையினால் உள்ளூராட்சி ஓய்வூதிய நிதியத்திற்கு செலுத்த வேண்டிய ரூபா 1,519,796 இற்கான பங்களிப்புத் தொகையினை நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்டிருக்கவில்லை.

1.3.4 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை

தேவையான தகவல்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படாமையால் ரூபா 151,703,682 இற்கான கொடுக்கல் வாங்கல்களை கணக்காய்வின் போது திருப்திகரமாக சான்றுறுதி செய்வதற்கு முடியாதிருந்தது.

1.3.5 இணக்கமின்மைகள்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடன் இணக்கமின்மைச் சந்தர்ப்பங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடன் தொடர்பு | இணக்கமின்மைகள் |
|---|---|---|
| (அ) | 1988 பிரதேச சபை (நிதி மற்றும் நிருவாக) விதி | |
| (i) | விதி 193 | பாதீட்டு மற்றும் குறை நிரப்பு செலவுகள் அங்கீகரிக்கப்பட்ட செலவுகளின் உண்மையான மீதியுடன் ஒப்பிட்டு மிகைகள் மற்றும் குறைவுகளுக்கான காரணங்களைக் காட்டும் கூற்றொன்று தயாரிக்கப்பட்டு கணக்காய்விற்கு சமர்ப்பித்திருக்கவில்லை. |
| (ii) | விதி 217-218 | மீளாய்வாண்டின் போது சபைக்குச் சொந்தமான காணிகள் மற்றும் கட்டிடங்கள் தொடர்பாக கணிப்பீடு மேற்கொண்டிருக்கவில்லை. |
| (ஆ) | இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணங்கள் | |

| | | |
|---|---|---|
| (i) | நி.பி. 387 | (அ) அரச கணக்குகளில் மேலதிகப்பற்று ஏற்படலாகாது எனினும் அதற்கு முரணாக 04 வங்கிக் கணக்குகளில் இருந்து மேலதிகப் பற்று பெற்றிருந்தமையால் ரூபா 12,123 தொகையொன்று மீளாய்வாண்டின் போது வட்டியாகச் செலுத்தப்பட்டிருந்தது.<br>(ஆ) நிதிப் பிரமாணங்களின் பிரகாரம் அரச நிறுவனங்கள் வங்கி மேலதிகப் பற்று வசதிகள் பெற்றுக் கொள்ளக் கூடாது எனினும் சபைக்கு சொந்தமான இலக்கம் 032100102475915 கொண்ட மற்றும் இலக்கம் 032100122475919 கொண்ட வங்கி கணக்குகள் தொடர்பாக மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறு காசேட்டில் முறையே ரூபா 188,003 தொகை மற்றும் ரூபா 924,071 மேலதிகப்பற்று பெறப்பட்டுள்ளது. |
| (ii) | நி.பி. 395 | இலக்கம் 032100102475915 கொண்ட வங்கிக் கணக்கில் ரூபா 73,000 இணங்காணப்படாத வரவுகள் மற்றும் மிகையாக வைப்புச் செய்தல் ரூபா 66,179 ஆகிய மீதிகள் தீர்க்கப்படாமல் வங்கி இணக்கக் கூற்றில் காட்டப்பட்டிருந்தன. |
| (iii) | நி.பி. 507 | கையிருப்பில் பொருட்களின் பெறுமதியினை கணக்குகளில் காட்டுவதற்காக வருட இறுதியில் உள்ளவாறு பௌதீக சான்றுறுதி மேற்கொள்ளப்பட்டு நிலையான சொத்துக்களின் உளமை செய்தல் தொடர்பாக கூற்றொன்று கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும். எனினும் அவ்வாறு செய்திருக்கவில்லை. |
| (இ) | திறைசேரிச் சுற்று நிருபம் | |
| | 2002 நவம்பர் 28 திகதிய ஐஏஜ/2002/02 கொண்ட திறைசேரிச் செயலாளரின் சுற்று நிருபம் | சபைக்குச் சொந்தமான மஹிந்த விஜேசேகர கணனி நிலையம், அலுவலகம் மற்றும் நனஸெல ஆகிய இடங்ககளில் உள்ள 14 கணனிகள் தொடர்பாக நிலையான சொத்துக்கள் பதிவேடு ஒன்று பேணப்பட்டிருக்கவில்லை. |
| (ஈ) | இலங்கை குடியரசின் தாபனக் கோவையின் அத்தியாயம் xxiv பிரிவு 4.2.3 | பிரதேச சபை அலுவலகங்களுக்கு 2010 ஆண்டின் போது கடன் செலுத்தல் மேற்கொள்ளும் போது கடன் விண்ணப்பம் மற்றும் அதனுடனான படிவங்கள் அலுவலரினால் முறையாக தயாரிக்கப்பட்டு சமர்ப்பிக்கப்பட வேண்டும். அத்துடன் முறையான மேற்பார்வையின் பின்னர் கொடுப்பனவு மேற்கொள்ளப்பட வேண்டும். எனினும் திணைக்களத் தலைவர் அங்கீகரித்தல் மேற்கொள்ளப்படாமல் கடன்கள் செலுத்தப்பட்டிருந்தன என அவதானிக்கப்பட்டது. |
| (உ) | 1999 ஜுன் 11 திகதிய இலக்கம் ஆ/3/1/1-1 கொண்ட பொது நிருவாகச் சுற்று நிருபம் | 2010 ஆண்டின் போது கொடுப்பனவு செய்யப்பட்டிருந்த அனைத்து கடன்கள் பெற்றோரும் தனது விசுவாசத்துடன் மேற்கொள்ளும் கூற்று சமர்ப்பித்திருக்கவில்லை. |
| (ஊ) | 1999 ஏப்ரல் 09 திகதிய இலக்கம் 1/99 கொண்ட பொது நிருவாக சுற்று நிருபம் | 1996 ஜனவரி 01 திகதி முதல் செயற்படுமுகமாக அரச அலுவலகங்களின் வைக்க வேண்டிய பிணைத் தொகைகள் திருத்தப்பட்டிருந்தது. அத்துடன் அதன் பிரகாரம் 06 அலுவலர்கள் மற்றும் ஊழியர்களிடம் பிணைகள் பெற்றிருக்கவில்லை. |

## 02. நிதி மற்றும் செயற்பாட்டு மீளாய்வு

### 2.1 நிதிப் பெறுபேறுகள்

சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் 2010 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டின் போது சபையின் மீண்டுவரும் வருமானத்தை விஞ்சிய செலவு ரூபா 3,153,562 ஆக காணப்பட்டதுடன் அதற்கு நேர்மாறாக முன்னைய ஆண்டிற்கான மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 39,574 ஆக காணப்பட்டது.

## 2.2 வருமான நிருவாகம்

### 2.2.1 மதிப்பீட்டு வருமானம், உள்ளவாறான வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டு தொடர்பாக மதிப்பீட்டு வருமானங்கள், உள்ளவாறான வருமானங்கள் உட்பட நிலுவை வருமானங்கள் பற்றிய தகவல்கள் 2011 பெப்ரவரி 23 திகதிய எனது கடிதத்தின் மூலம் குறிப்பிட்ட படிவத்தில் சமர்ப்பிக்கும் படி தலைவரை வேண்டிக் கொண்ட போதும் தகவல்கள் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. எவ்வாறாயினும், நிதிக் கூற்றுக்களுடன் சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிலுவை வருமானக் கூற்றின் பிரகாரம் 2010 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு காணப்பட்ட நிலைமை முன்னைய ஆண்டுடன் ஒப்பிட்டு சுருக்கமாக கீழே தரப்பட்டுள்ளது.

| விபரம் | நிலுவை வருமானம் | | அதிகரிப்பு சதவீதப்படி | குறைதல் சதவீதப்படி |
|---|---|---|---|---|
| | 2010 ரூபா. | 2009 ரூபா. | % | % |
| வீத வரி | 592,220 | 579,148 | 2.25 | - |
| ஏக்கர் வரி | 15,482 | 38,819 | - | 60.11 |
| ஏனைய வருமானங்கள் | 39,107,885 | 33,950,334 | 15.15 | - |

(அ) நிலுவை வீத வரி

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டுகள் தொடர்பாக சபைக்கு அறவிடப்பட வேண்டியிருந்த ரூபா 39,715,587 இற்கான வீத வரி 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை அதிகாரச் சட்டத்தின் 158 மற்றும் 159 பிரிவுகளிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் அறவிடப்படுவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

### 2.2.2 நீதி மன்றத் தண்டப் பணம்

பல்வேறு கட்டளைச் சட்டங்களின் கீழ் நீதிவான் நீதிமன்றம் ஒன்றில் இருந்து 2010 திசெம்பர் 31 திகதி வரை அறவிடப்பட்டு பிரதான செயலாளருக்கு அனுப்பியிருந்த ரூபா 200,000 தொகைக்காக தண்டப் பணம் சபைக்குக் கிடைக்க வேண்டியிருந்தது.

### 2.2.3 முத்திரைக் கட்டணம்

2010 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு பதிவாளர் நாயகத்திடமிருந்து ரூபா 5,000,000 இற்காக முத்திரைக் கட்டணம் கிடைக்க வேண்டியிருந்தது.

### 2.2.4 கடைகளை வாடகைக்கு கொடுத்தல்

(அ) சபைக்குச் சொந்தமான கெகனதுர சுவர்ணபுர 11 கடைகள் மற்றும் பழைய 4 கடைகளுடன் 14 கடைகளில் 8 கடைகளில் உடன்படிக்கையின் நிபந்தனை 5: 2: 23 இன் பிரகாரம் உடன்படிக்கையின் காலம் விஞ்சியிருந்ததுடன் 07 கடைகள் வர்த்தக நடவடிக்கைகள் எதற்கும் பயன்படுத்தப்படாமல் மூடப்பட்ட நிலையில் காணப்பட்டது.

(ஆ) இதன் காரணமாக சந்தையில் போட்டித் தன்மை குறைந்து அதன் மூலம் நுகர்வோருக்கு சேவை ஒன்று கிடைக்காமையால் கடைகள் நிர்மாணிப்பதற்காக செலவிட்ட கிரயம் பொதுசன நலன்களுக்கு பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை என அவதானிக்கப்பட்டது.

(இ) இலக்கம் 04 மற்றும் இலக்கம் 05 கடைகளில் இருந்து முறையே ரூபா 9,000 வாடகை மற்றும் நிலுவையாக இருந்த ஒரே முறையில் செலுத்தும் பணம் ரூபா 263,718 தொகை 2011 ஜூன் 02 திகதி வரை அறவிடப்பட்டிருக்கவில்லை.

(ஈ) கடை வாடகை உடன்படிக்கையின் 5.2.5, 5.2.15 மற்றும் 5.2.19 பந்திகளுக்கு முரணாக முறையே துணை வாடகை மற்றும் கடைகளில் மாற்றங்கள் மேற்கொள்ளல் நடைபெற்றுள்ளது.

(உ) வாடகை உடன்படிக்கை பிரிவு 5.2.5 இன் பிரகாரம் தலைவர் / செயலாளரின் பூர்வாங்க அங்கீகாரம் இன்றி வாடகையாளர் குறிப்பிட்ட கடையை அல்லது பகுதி ஒன்றின் உரித்தினை விற்பனை செய்தல், சாட்டுதல் செய்தல் அல்லது துணை வாடகைக்கு கொடுத்தல் கூடாது என குறிப்பிட்டிருந்த போதும் 01 ஆம் இலக்க கடை ரூபா 6,000 தொகைக்கு வாடகையாளர் வேறு ஒருவருக்கு துணை வாடகைக்கு கொடுத்திருந்தார்.

(ஊ) தென் மாகாண உள்ளூராட்சி ஆணையாளரின் 2010 திசெம்பர் 27 திகதி இலக்கம் தபபா/ப.ப.கொ/2010/01 கொண்ட உள்ளூராட்சி மன்றங்களுக்கு உரிய கடைகளை வாடகைக்கு கொடுத்தல் தொடர்பான சுற்று நிருபத்தின் நடைமுறை இலக்கம் 4,5,6,7 மற்றும் 11 இன் பிரகாரம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

2.2.5 தொலைபேசி/ தொலை தொடர்பு கோபுரக் கட்டணம்

---

சபையின் அதிகாரப் பிரதேசத்தில் நிறுவப்பட்டிருந்த தொலைபேசி/ தொலை தொடர்பு கோபுரங்கள் தொடர்பாக பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) நகர அபிவிருத்தி அதிகார சபைப் பணிப்பாளர் நாயகத்தின் 2008 திசெம்பர் 16 மற்றும் 05/2/1/384 கொண்ட கடிதத்தின் v ஆவது பட்டோலையின் இலக்கம் 06(11) பிரகாரம் அபிவிருத்தி அனுமதிப்பத்திரங்கள் வழங்குவதற்காக தொலை தொடர்பு கோபுரங்களில் இருந்து ரூபா 110,000 இற்கான செய்முறை கட்டணம் அறவிடப்பட வேண்டும். எனினும் அந்த கட்டணத்தை அறவீடு செய்வதற்காக வருமானப் பதிவேடு ஒன்று அல்லது வேறு தகவல்கள் அடங்கிய கோவையொன்று பேணப்பட்டிருக்கவில்லை. எனவே அந்தப் பணம் அறவிடப்பட்டதா என உறுதிப்படுத்தப்படவில்லை.

(ஆ) மேற்கூறிய கடிதத்தின் இலக்கம் 07(v) இன் பிரகாரம் தொலைதொடர்பு கோபுரம் தற்போது செயற்பட்ட நிலையில் காணப்பட்ட போதும் அவற்றிற்கான இணக்கச் சான்றிதழ் வழங்கியிருக்கவில்லை. அத்துடன் அறவிடப்பட வேண்டிய தொகை ரூபா 10,000 ஆகும்.

(இ) 2008 திசெம்பர் 05 திகதிய இலக்கம் 2008/288 மற்றும் 2009 திசெம்பர் 02 திகதிய இலக்கம் 2009/272 கொண்ட தொலைபேசி கோபுரம் நிர்மாணிக்கும் கோவை கணக்காய்விற்கு சமர்ப்பித்திருக்கவில்லை.

2.2.6 விளம்பர அறிவித்தல்/ தென்படக் கூடிய சுற்றுச் சூழல் கட்டணம்

---

சபையின் அதிகாரப் பிரதேசத்தில் விளம்பர அறிவித்தல்/ தென்படக் கூடிய சுற்று சூழல் தொடர்பாக கட்டணம் அறவீடு செய்வதற்காக 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை அதிகாரச் சட்டத்தின் பிரிவு 122(1) மற்றும் 1988 ஆகஸ்ட் 23 திகதிய இலக்கம் 520/7 கொண்ட வர்த்தமானியின் பிரகாரம் விதிக்கப்பட்டு துணை விதியின் பந்தி 39 இன் பிரகாரம் காட்சிப்படுத்தும் அறிவித்தல்களில் இருந்து கட்டணங்கள் அறவீடு செய்வதற்கு 2010 அக்டோபர் 29 திகதி பொதுக் கூட்டத்தில் தீர்மானம் எடுக்கப்பட்டிருந்தது.

(அ) சபையின் அதிகாரப் பிரதேசத்தில் மாதிரி ஒன்றாக தெரிவு செய்யப்பட்ட சில இடங்களில் 2011 ஜூன் 03 திகதி மேற்கொள்ளப்பட்ட பௌதீக பரிசோதனையின் போது மேற் கூறிய வர்த்தமானியின் பட்டோலையில் குறிப்பிட்டுள்ள விளம்பர அறிவித்தல்கள் காட்சிப்படுத்தப்பட்ட நிலையில் காணப்பட்டது. அவ்வாறு காட்சிப்படுத்தப்பட்டிருந்த 28 அறிவித்தல்களில் இருந்து ரூபா 53,736 தொகையொன்று அறிவிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) விளம்பர அறிவித்தல் பலகைகளுக்காக வருமானப் பதிவேடு ஒன்று பேணப்பட்டிருக்காமையால் சபையின் அதிகாரப் பிரதேசத்தில் கட்டணங்கள் அறவீடு செய்தல் பிழையற்ற முறையில் மேற்கொள்ளப்பட்டிருந்ததென உறுதிப்படுத்தப்படவில்லை.

2.3 செலவினக் கட்டமைப்பு

---------------------------------

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்கான சபையின் பாதீட்டு மற்றும் உள்ளவாறான செலவு உரிய முரண்களுடன் கீழே தரப்பட்டுள்ளன.

| செலவு விடயம் | 2010 | | | 2009 | | |
|---|---|---|---|---|---|---|
| மீண்டுவரும் செலவுகள் | பாதீட்டு | உள்ளவாறான | முரண் | பாதீட்டு | உள்ளவாறான | முரண் |
| | ரூபா. '000 | ரூபா. '000 | ரூபா. '000 | ரூபா. '000 | ரூபா. '000 | ரூபா. '000 |
| ஆளுக்குரிய வேதனம் | 23,772 | 19,615 | 4,157 | 24,533 | 18,646 | 5,887 |
| ஏனையவை | 23,578 | 17,548 | 6,030 | 17,344 | 14,825 | 2,519 |
| உப கூட்டுத் தொகை | 47,350 | 37,163 | 10,187 | 41,877 | 33,471 | 8,406 |
| மூலதன செலவுகள் | 102,560 | 34,190 | 68,370 | 90,875 | 29,439 | 61,436 |
| மொத்தக் கூட்டுத் தொகை | 149,910 | 71,353 | 78,557 | 132,752 | 62,910 | 69,842 |

2.4 மனித வள முகாமைத்துவம்

----------------------------------------------

அங்கீகரிக்கப்பட்ட மற்றும் உள்ளவாறான பதவியணிகள்

--------------------------------------------------------------------------------------

2010 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு சபையின் அங்கீகரிக்கப்பட்ட மற்றும் உள்ளவாறான பதவியணிகள் பற்றிய தகவல்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| பதவிகளின் வகை | அங்கீகரிக்கப்பட்டவை | உள்ளபடியானவை | பற்றாக்குறை/மிகை | |
|---|---|---|---|---|
| நிறைவேற்று தரம் | 01 | - | 01 | - |
| இரண்டாரம் தரம் | 17 | 14 | 03 | - |

| | | | | |
|---|---|---|---|---|
| ஆரம்ப தரம் | 28 | 26 | 02 | - |
| ஏனையவை(அமைய, தற்காலிக) | - | 43 | - | 43 |
| | 46 | 83 | 06 | 43 |

(அ) மீளாய்வாண்டிற்காக உள்ளூராட்சி ஆணையாளரிடம் சம்பளத்திற்காக மீளளிப்பு செய்திருந்த தொகை ரூபா 9,864,000 தொகை எனினும் செலவு ரூபா 19,173,404 தொகையாக காணப்பட்டமையால் ரூபா 9,309,404 வித்தியாசம் சபை நிதியத்திற்கு செலவுப் பொறுப்பு ஒன்றாகியுள்ளது.

(ஆ) திறைசேரி செயலாளரின் 2006 ஏப்ரல் 10 திகதிய இலக்கம் 28 கொண்ட சுற்று நிருபங்களின் மூலம் உள்ளூராட்சி நிறுவனங்களில் அமைய, தற்காலிக, பிரதியீட்டு, ஒப்பந்த அடிப்படையில் ஊழியர்கள் சேர்க்கப்படல் இடைநிறுத்தப்பட்டிருந்த போதும் அந்த ஏற்பாடுகளுக்கு முரணாக 43 ஊழியர்கள் சேர்க்கப்பட்டு 2010 ஜனவரி 01 முதல் திசெம்பர் 31 வரை சம்பளமாக ரூபா 7,654,647 தொகையொன்று சபை நிதியத்தில் இருந்து செலுத்தப்பட்டிருந்தது. இந்த சுற்று நிருப அறிவுரைகளை தாண்டிச் சென்று ஆட்சேர்ப்புக்கள் மேற்கொள்ளப்படின் குறிப்பிட்ட நிறுவனத் தலைவர் அதற்காக தனிப்பட்ட முறையில் பொறுப்பு வாய்ந்தவர் என சுட்டிக் காட்டப்பட்டிருந்தது.

## 2.5 சொத்துக்கள் முகாமைத்துவம்

### 2.5.1 பயன்படுத்தப்படாத சொத்துக்கள்

2006 ஆண்டின் போது ரூபா 675,000 இற்கு கொள்வனவு செய்திருந்த மின்பிறப்பாக்கி மற்றும் 2009 ஆண்டிற்கு முன்னர் இருந்து கணக்குகளில் காணப்படும் ரூபா 90,386 பெறுமதியான பைபர் இருப்புத் தொக்கு ஒன்று கணக்காய்வுத் திகதியாகிய 2011 ஜூன் 02 திகதி வரை பயன்படுத்தப்படாது காணப்பட்டது.

## 2.6 கிடைக்க வேண்டிய கணக்குகள்

2010 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு கிடைக்க வேண்டிய கணக்கு மீதிகளின் பெறுமதி ரூபா 39,715,587 தொகை ஆகும்.

## 2.7 அறவிடப்பட வேண்டிய பதவியணிக் கடன்

2010 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு அறவிடப்பட வேண்டியிருந்த பதவியணிக் கடன் முற்பண மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 1,504,058 ஆகும். பதவியை விட்டு விலகிச் செல்லல், ஓய்வு பெறல் மற்றும் இடமாற்றம் பெற்றுச் சென்றுள்ள ஆறு ஊழியர்களிடம் அறவிடப்பட வேண்டிய ரூபா 7,300 தொகை நீண்ட காலமாக அறவிடப்படாமல் காணப்பட்டது.

## 2.8 செயற்பாட்டுத் திறமையின்மை

2.8.1 துணை விதிகளின் ஏற்பாடுகளை அமுல் நடத்தாமை

---

மாத்தறை பிரதேச சபை அதிகாரப் பிரதேசத்தில் நடத்தப்பட்டு வரும் பதிவு செய்யப்பட்டிருந்த பேக்கரிகள் 17 ஆகும். அத்துடன் மாதிரி ஒன்றாக தெரிவு செய்யப்பட்ட இரண்டு பேக்கரிகள் தொடர்பாக 2011 ஜுன் 02 திகதி சபையின் வருமானப் பரிசோதகருடன் மேற்கொள்ளப்பட்ட இடப் பரிசோதனையின் போது வெளிப்படுத்தப்பட்ட விடயங்கள் பின்வருமாறு

(அ) 1988 ஆகஸ்ட் 23 திகதிய இலக்கம் 520/7 கொண்ட வர்த்தமானி மூலம் 1952 இன் 06 ஆம் இலக்க உள்ளூராட்சி நிறுவனங்கள் (அங்கீகரிக்கப்பட்ட துணை விதிகள்) அதிகாரச் சட்டத்தின் பிரிவு 2 இன் கீழ் உள்ளூராட்சி அமைச்சரினால் தயாரிக்கப்பட்டிருந்த அந்த வரைபு துணை விதிகளில் அடங்கியுள்ள ஏற்பாடுகள் அடங்கிய துணை விதிகளைத் தயாரிப்பதற்காக 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை அதிகாரச் சட்டத்தின் பிரிவு 221(அ)உடன் வாசிக்கப்படும் 122 மற்றும் 126 ஆகிய பிரிவுகளின் மூலம் பிரதேச சபைக்கு அதிகாரம் அளிக்கப்பட்டுள்ளது.

(ஆ) சபையின் அதிகாரப் பிரதேசத்தில் உள்ள பேக்கரிகள் மேற்கூறிய துணை விதிகளில் 16.3.2(ஆ), 16.3.3(ஆ), 16.5, 16.6, 16.8, 16.22, 16.23 மற்றும் 16.26 இன் பிரகாரம் செயற்பட்டிருக்கவில்லை.

(இ) பரிசோதனை மேற்கொள்ளப்பட்ட பேக்கரிகள் மிகவும் சுத்தம் அற்ற நிலைமையில் காணப்பட்டது எனினும் அவற்றை சபை அதிகாரப் பிரதேசத்திலுள்ள பொதுசன சுகாதாரப் பரிசோதகரின் பரிசோதனைக்கு ஆளாகியிருக்கவில்லை.

2.8.2 வீதி விளக்குகள் பராமரிப்பு

---

சபையின் அதிகாரப் பிரதேசத்திலுள்ள வீதி விளக்குகளின் பராமரிப்பு பற்றி மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வுப் பரிசோதனையின் போது பின்வரும் தகவல்கள் வெளிப்படுத்தப்பட்டன.

(i) வீதி விளக்குகள் பராமரிப்பு தொடர்பாக மின் உபகரணங்கள் கொள்வனவு செய்யும் போது தேவையின் பிரகாரம் பராமரிப்பு மின்சார தொழிலாளரின் விண்ணப்பம் மற்றும் அதற்காக தொழில்நுட்ப அலுவலரின் அங்கீகாரத்தின் மூலம் அவற்றை கொள்வனவு செய்தல் மேற்கொள்ளப்பட வேண்டும். எனினும் அவ்வாறான செயன்முறையொன்று கடைபிடிக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) சபை அதிகாரப் பிரதேசத்தில் பராமரிக்கப்படும் வீதி விளக்குகள் ஒவ்வொன்றை தனித்தனியாக இனங்காணக் கூடிய விதமாக இலக்கம் அல்லது குறியீட்டு முறைமையொன்றினை பயன்படுத்தி ஒவ்வொரு வீதி விளக்குகளுக்கும் மின்குமிழ்கள் மற்றும் ஏனைய உபகரணங்கள் பொருந்தும் போது பதிவேடு ஒன்று பேணப்பட வேண்டும் எனினும் அவ்வாறு செய்திருக்கவில்லை.

(iii) 2006 ஆண்டு முதல் 2010 ஆண்டு வரை வீதி விளக்குகளின் பராமரிப்பு விடயங்களுக்காக சபை இலங்கை மின்சார சபையில் இருந்து விண்ணப்பித்திருந்த போதும் முழுத் தொகையும் கிடைத்திருக்கவில்லை. அத்துடன் 2010 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு கிடைக்க வேண்டிய நிலுவைத் தொகை ரூபா 141,296 ஆகும்.

2.8.3 இனங்காணப்பட்ட நட்டங்கள்

---

2009 மற்றும் 2010 ஆண்டுகளின் போது நாவிமன வடகரு சனசமூக நிலையத்தின் மின்சார பில்பத்திரத்திற்காக ரூபா 12,380 தொகையொன்று கொடுப்பனவவினை பகிஷ்கரித்தமையால் மின்சாரம் துண்டிக்கப்பட்டு மீண்டும் மின்சார இணைப்பு பெறுவதற்காக மின்சார சபைக்கு ரூபா 8,342 தொகையொன்று மேலதிகமாக செலுத்தப்பட்டுள்ளது சபை நிதியத்திற்கு நட்டமொன்றினை ஏற்படுத்தியுள்ளது.

2.8.4 வாகனக் கட்டுப்பாடு

---

(அ) அனைத்து வாகனங்கள் தொடர்பாகவும் சம்பவக் குறிப்புகள் பேணப்பட்டிருக்காமையால் புதிதாக உபகரணங்கள் பெற்றுக்கொள்ளல், சேவிஸ் பண்ணுதல், டயர் டியூப் மாற்றுதல் ஆகிய தகவல்கள் முறைப்படி இனங்காண முடியாதிருந்தது. வாகன திருத்த வேலை மேற்கொள்ளப்பட்ட பின்னர் வாகனத்திற்கு பொறுப்பான அலுவலரினால் அதற்காக கையொப்பமிட்டு உறுதிப்படுத்தியிருக்கவில்லை.

(ஆ) சபை 500 லீற்றர் எரிபொருளை இருப்பில் வைத்துக்கொண்டு எரிபொருள் வினியோக மேற்கொண்டிருந்தது. அத்துடன் அதன் பொறுப்பு பிரதியீட்டு தொழிலாளர் ஒருவருக்கு சாட்டப்பட்டிருந்தமையால் எரிபொருள் பெறுவனவு மற்றும் வினியோகப் பதிவேட்டில் சமப்படுத்தலின் போது குறைவுகள் மற்றும் மிகைகள் காணப்பட்டதென அவதானிக்கப்பட்டது.

2.8.5 காணிகளை சிறு துண்டுகள் பகிர்தலுக்கான கட்டணம் அறவீடு செய்தல் மற்றும் பொது வசதிகளுக்கான பகுதிகள் கிடைத்தல்

---

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) நகர அபிவிருத்தி அதிகார சபைத் தலைவரின் 1992 செப்டம்பர் 30 திகதிய அபிவிருத்தி பிரமாண சுற்று நிருப இலக்கம் 06 இன் 2.1 பந்தி மற்றும் அதிகார சபையின் 1986 மார்ச் 10 திகதிய இலக்கம் 392/9 கொண்ட வர்த்தமானியின் பிரிவு 22(1) கட்டளையின் பிரகாரம் துண்டுகளாகப் பகிர்வதற்கு திட்டமிட்டுள்ள காணிப் பகுதி அல்லது தரைப் பகுதி ஹெக்டயரை விட அதிகரிக்குமிடத்து அவ்வாறு அதிகரிக்கும் சந்தர்ப்பத்தில் வீதிகளுக்காக ஒதுக்கிய பின்னர் காணியில் 10% ற்குக் குறைவில்லாத பகுதி ஒன்று சனசமூக மற்றும் களியாட்ட விடயங்களுக்கு பொருத்தமான காணித் துண்டு ஒன்று ஒதுக்கப்பட வேண்டும். எனினும் அவ் ஏற்பாடுகளின் பிரகாரம் ஒதுக்கப்பட்டிருக்காத சந்தர்ப்பங்கள் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது.

மாத்தறை தல்பாவிலவில் அமைந்துள்ள ஸனீஸயிட் காணி சுவர்ணபுர செயற்திட்டத்தில் இருந்து ரூபா 232,967 பெறுமதியான 15.77 பர்சஸ்களும், தல்பாவில கஹடகஹவத்த காணி (கோல்டன் ஸிடி)க்காக ரூபா 918,353 பெறுமதியான 54.29 பர்சஸ்களும் சபைக்கு கிடைத்திருக்கவில்லை. அத்துடன் சில்வாடேலவத்த காணியில் இருந்து 193.42 பர்சஸ்கள் குறைவாக கிடைத்திருந்தது.

(ஆ) மேற்கூறிய பிரமாண சுற்று நிருப இலக்கம் 06(vi) மற்றும் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை அதிகாரச் சட்டத்தின் பிரிவு 154(1) இன் பிரகாரம் காணிகள் துண்டுகளாக பகிர்ந்து விற்பனை செய்யும் போது 1% வரி என தல்பாவிலவில் அமைந்துள்ள ஸனீஸயிட் வத்த என்ற காணியில் இருந்து ரூபா 631,736 தொகையும் கெக்கனதுர ஸில்வாடேவத்த என்ற காணியில் இருந்து ரூபா 134,819 தொகையும் அறவிடப்பட்டிருக்கவில்லை. அத்துடன் மேலும் அவ்வாறான மூன்று காணிகளில் இருந்து பணம் ஏதும் அறவிடப்பட்டிருக்கவில்லை.

(இ) 2009 ஏப்ரல் 17 திகதிய 1597/8 கொண்ட வர்த்தமானியின் v வது பட்டோலையில் vii ஆம் பந்தியின் பிரகாரம் ஐந்து காணிகளில் இருந்து காணி துண்டுகளாக்குவதற்காக இணக்கச் சான்றிதழ் வழங்கியிருக்கவில்லை. இவ்வாறான சான்றிதழ் ஒன்று பெற்றிருக்காத சந்தர்ப்பங்களில் விற்பனை ஆரம்பித்த திகதி முதல் ஒரு நாளைக்கு ரூபா 50 வீதம் கட்டணம் அறவிடப்பட வேண்டும். எனினும் அவ்வாறு செய்திருக்கவில்லை.

(ஈ) பொது சன மற்றும் களியாட்ட விடயங்களுக்காக கற்பாறைகள, சேற்று நிலங்கள் மற்றும் பள்ளமான இடங்கில் அல்லாத பொருத்தமான இடம் ஒன்றில் இருந்து சபைக்கான பகுதியை ஒதுக்க வேண்டும். எனினும் அவ்வாறு நடைபெற்றிருக்கவில்லை. அனேகமான பகுதிகள் சேற்றுங்கள், மலை பாங்கான இடங்கள், பள்ளமான மற்றும் சிறுசிறு துண்டுளாக கிடைத்திருந்தன என அவதானிக்கப்பட்டது.

(உ) காணிகள் துண்டுகளாக்குவதற்காக குழுத் தீர்மானங்கள் வழங்கும் போது விதிக்கப்படும் நிபந்தனைகளின் பிரகாரம் காணியில் பாதைகள் மற்றும் வடிகால்கள் நிர்மாணித்தல் மற்றும் அவற்றை பராமரித்தல், நீர் மற்றும் மின்சாரம் வழங்கள் என்பன முறையாக மேற்கொள்ளப்பட்டிருக்காத சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன.

2.9 அகக் கணக்காய்வு

--------------------------------

சபையில் போதியளவு அகக் கணக்காய்வு ஒன்று மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

03. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

---------------------------------------------------------

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுப் பகுதிகள் தொடர்பாக சபையின் விஷேட கவனம் தேவைப்படுகின்றது.

(அ) கணக்கீடு

(ஆ) வருமான நிருவாகம்

(இ) சொத்துக்கள் கட்டுப்பாடு

(ஈ) களஞ்சியக் கட்டுப்பாடு

(உ) மனிதவள முகாமைத்துவம்